காலாண்டுத் தேர்வு – 2024 தமிழ்

வகுப்பு : 8 மதிப்பெண்கள் : 100 காலம் : 2.30 மணி

பகுதி – I

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக. 15×1=15

1. தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ______________.

அ) பாரதிதாசன் ஆ) தந்தை பெரியார்

இ) வ.உ.சிதம்பரனார் ஈ) பெருஞ்சித்திரனார்

2. திருக்குறளில் விடுபட்ட சரியான சீர்களைத் தேர்க.

தன்குற்றம் நீக்கிப் ______________ காண்கிற்பின்

______________ ஆகும் இறைக்கு.

அ) என்குற்றம், கற்றறாரோடு ஆ) பிறர்குற்றம், என்குற்றம்

இ) தன்குற்றம், இறைக்கு ஈ) இலங்குநூல், பிறர்குற்றம்

3. என் நண்பர் பெரும் புலவராக இருந்தபோதும் ______________ இன்றி வாழ்ந்தார்.

அ) சோம்பல் ஆ) அகம்பாவம்

இ) வருத்தம் ஈ) வெகுளி

4. 'சீருக்கு+ஏற்ப' என்பதைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________.

அ) சீருக்குஏற்ப ஆ) சீருக்கேற்ப

இ) சீர்க்ககேற்ப ஈ) சீருகேற்ப

5. 'மலர் பானையை வனைந்ததாள் ' – இத்தொடர் ______________ பொருளைக் குறிக்கிறது.

அ) ஆக்கல் ஆ) அழித்தல் இ) கொடை ஈ) அடைதல்

Padasalai.Net

6. வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து

______________ என அழைக்கப்படுகிறது.

அ) கோட்டெழுத்து ஆ) வட்டெழுத்து

இ) சித்திர எழுத்து ஈ) ஓவிய எழுத்து

7. கல்விப் பயிற்சிக்குரிய பருவம் ______________.

அ) இளமை ஆ) முதுமை இ) நேர்மை ஈ) வாய்மை

8. தமிழின் இனிமைதான் என்னே! – இத்தொடரில் இடம்பெற்றுள்ள

நிறுத்தக்குறியைத் தேர்க.

அ) அரைப்புள்ளி ஆ) வியப்புக்குறி

இ) காற்புள்ளி ஈ) வினாக்குறி

9. 'நெடுமை+தேர்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைப்பது

______________.

அ) நெடுதேர் ஆ) நெடுத்தேர்

இ) நெடுந்தேர் ஈ) நெடுமைதேர்

10. உடல் எடை அதிகரிப்பதால் ஏற்படும் நோய்களுள் ஒன்று______________.

அ) தலைவலி ஆ)காய்ச்சல் இ) புற்றுநோய் ஈ) இரத்தக்கொதிப்பு

11. மக்கள் என்ற சொல்லுக்கான சரியான தொகை மரபைத் தேர்க.

அ) மந்தை ஆ) நிரை இ) கூட்டம் ஈ) குவியல்

12. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ___________ எனப்படும்.

அ) முற்று ஆ) எச்சம்

இ) முற்றெச்சம் ஈ) வினையெச்சம்

13. ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ______________.

அ) மார்பு ஆ)கழுத்து இ) தலை ஈ) மூக்கு

14. பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ______________.

அ) வலிமையற்றவர் ஆ)கல்லாதவர் இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர

15. "காலை மாலை உலாவிநிதம்

Padasalai.Net

காற்று வாங்கி வருவோரின்

காலைத் தொட்டுக் கும்பிட்டுக்

காலன் ஓடிப் போவானே!"

இப்பாடலில் இடம்பெற்றுள்ள எதுகையைத் தேர்க.

அ) காலை - வருவோரின் ஆ) காற்று - போவானே

இ) காலன் - கும்பிட்டு ஈ) காலை - மாலை

பொருத்துக. 4×1= 4

16. பசுமரத்துஆணிபோல - தற்செயல் நிகழ்வு

17. காக்கை உட்கார

பனம்பழம் விழுந்தது போல - பயனற்ற செயல்

18. விழலுக்கு இறைத்த

நீர் போல - எதிர்பாராத நிகழ்வு

19. கிணறு வெட்ட பூதம்

கிளம்பியது போல - எளிதில் மனத்தில் பதிதல்

பகுதி – II - பிரிவு - 1

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக. 6×2=12

20. யாருடைய உள்ளம் மாணிக்கக் கோயில் போன்றது?

21. 'புலித் தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?

22. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக்கூடாது?

23. நல்வாழ்விற்கு நாம் நாள்தோறும் செய்ய வேண்டியவை யாவை?

24. வீரமாமுனிவர் மேற்கொண்ட எழுத்துச் சீர்திருத்தங்களில் எவையேனும் இரண்டனை எழுதுக.

25. திரு.வி.க. சங்கப் புலவர்களாகக் குறிப்பிடுபவர்களின் பெயர்களை எழுதுக.

26. சான்றோர்க்கு அழகாவது எது?

27. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?

பிரிவு - 2

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக. 6×2=12

28. வியங்கோள் வினைமுற்று எவ்வெப் பொருள்களில் வரும்?

29. தொடர்களில் உரிய நிறுத்தக்குறிகளை இடுக.

அ) திருக்குறள் அறம் பொருள் இன்பம் என்னும் முப்பால் பகுப்புக் கொண்டது

ஆ) திரு.வி.க எழுதிய பெண்ணின் பெருமை என்னும் நூல் புகழ்பெற்றது.

30. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

- இக்குறட்பாவில் அமைந்துள்ள அணியை எழுதுக.

31. கலைச்சொல் எழுதுக,

அ) Awareness ஆ) Vowel

32. ஆய்த எழுத்து எவ்வாறு பிறக்கிறது?

33. 'படி' என்ற சொல்லை ஒரே தொடரில் பல பொருள் தருமாறு எழுதுக.

34. விளிவேற்றுமை என்றால் என்ன?

35. சுற்றுச்சூழலைப் பாதுகாக்க உங்கள் பொறுப்புகளாக இரண்டனை எழுதுக.

பகுதி - III - பிரிவு -1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2×3=6

36. திருக்குறளைச் சீர் பிரித்து எழுதுக.

அ. தக்கார் தகவிலரென்பது அவரவர் எச்சத்ததால் காணப்படும்.

ஆ. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட

Padasalai.Net

பின் அல்லது.

இ. உளரென்னும் மாத்திரைய ரல்லலால் பயவாக் களரனையர் கல்லலா

தவர்.

37. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத்

தொகுத்து எழுதுக.

38. நீதிநெறி விளக்கப் பாடல் கூறும் கருத்துகளைத் தொகுத்து

எழுதுக.

பிரிவு -2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2×3=6

39. தமிழ் எழுத்துகளில் ஏற்பட்ட உருவ மாற்றங்களை எழுதுக.

40. தமிழ்வழிக் கல்வி பற்றித் திரு.வி.க. கூறுவனவற்றறை எழுதுக.

41. உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

எங்கள் கால்களைத் தாங்கி நிற்கும் இந்த நிலமானது

எம்முடைய பாட்டன்மார்கள் எரிந்த சாம்பலால் ஆனதாகும்.

இந்நிலமே எங்கள் தாயாகும்; எமது உறவுமுறையாரின் வளமான

வாழ்வால் ஆனதே இந்நிலமாகும். இதனை நாங்கள் எங்கள்

குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுப்பது போல் உங்கள்

குழந்தைகளுக்கும் நீங்கள் சொல்லிக் கொடுங்கள்

அப்போதுதான் அவர்கள் இந்நிலத்தை மதிப்பார்கள் என்று

சியாட்டல் கூறுகிறார்.

அ. நிலம் எதனால் ஆனதாக சியாட்டல் கூறுகிறார்?

ஆ. எமது உறவுமுறையாரின் ______________ ஆனதே

இந்நிலமாகும்.

Padasalai.Net

இ. சியாட்டல் நிலத்தை எவ்வாறு கருதுகிறார்?

பிரிவு -3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை எழுதுக. 2×3= 6

42. இரண்டாம் வேற்றுமை எத்தனை வகையான பொருள்களில் வரும்? அவை யாவை?

43. வினையெச்சத்தின் வகைகளை விளக்குக.

44. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையே உள்ள வேறுபாடுகள் யாவை?

பகுதி – IV

அடிபிறழாமல் எழுதுக. 2+3= 5

45. "தன்குற்றம் " எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

46. அ) "வாழ்க நிரந்தரம்!" எனத் தொடங்கி "இசை கொண்டு வாழியவே!" முடிய தமிழ்மொழி வாழ்த்துப் பாடலை எழுதுக.

(அல்லது)

ஆ) "நன்செய் " எனத் தொடங்கி "இன்பம் கூட்டி " என முடிய உள்ள ஓடை பாடல்.

பகுதி – V

கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 3×6=18

47. கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற உங்கள் நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் எழுதுக.

48. அ) நம் முன்னோர்கள் மரபுகளைப் பின்பற்றியதன் காரணம் என்னவாக இருக்கும் என நீங்கள் கருதுகிறீர்கள்?

(அல்லது)

Padasalai.Net

ஆ) நடுவுநிலைமை அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறட்பாக்களின் கருத்துகளை எழுதுக.

49. அ) தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) தற்காலத் தமிழ்மொழியின் வளர்ச்சிக்குச் செய்ய வேண்டிய பணிகளாக நீங்கள் கருதுவனவற்றை எழுதுக.

பகுதி – VI

கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. 2×8=16

50. அ) ‘வெட்டுக்கிளியும் சருகுமானும்’ கதையைச் சுருக்கி எழுதுக

(அல்லது)

ஆ) திருக்குறளின் கருத்தைப் பின்பற்றி நடந்த சகாதேவன் கதையைச் சுருக்கி எழுதுக.

51. அ) ’நான் விரும்பும் கவிஞர்’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) குறிப்புகளைக் கொண்டு ‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’ என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.

முன்னுரை- நோய் வர காரணங்கள்- நோய் தீர்க்கும் வழிமுறைகள்- வருமுன் காத்தல்- உணவும் மருந்தும்- உடற்பயிற்சியின் தேவை- முடிவுரை.

Padasalai.Net